**முதன்மை மாவட்ட நீதிமன்றம், ஈரோடு**

**SCOP No**. 79/2022

நாள் :02.01.2023

பெயர் : வான்மதி

எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை : (சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

என் சகோதரர் வேந்தன் இறந்த பிறகு என் தாயார் உயிரோடு இருந்தார் என்றால் சரிதான். என் சகோதரர் இறந்த பிறகு வாரிசு சான்றிதழ் கோரி என் தாயார் விண்ணப்பித்திருந்தாரா என்றால் எனக்கு தெரியாது. ம.சா.ஆ.4 தீர்ப்பின் மீது மேல்முறையீடு செய்யப்பட்டதா என்ற விவரம் எனக்கு தெரியாது. ம.சா.ஆ.5ன் அடிப்படையில் நாங்கள் எந்த உரிமையும் கோர இயலாது என்றால், நீதிமன்ற உத்தரவின் பேரில் உரிமை கோருகிறோம். இந்த மனு நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என் சகோதரரின் மனைவியை இந்த மனுவில் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. இந்த மனு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

மறு விசாரணை : இல்லை.